## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண். 313/2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. லட்சுமணகுமார் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. கந்தசாமி பிள்ளை | தொழில் | .. எல்.ஐ.சி. ஏஜென்ட் |
| வயது | .. 49 | ஜாதி | .. |
| கிராமம் | .. மகுடஞ்சாவடி | நாள் | .. 25.02.2022 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. லட்சுமணகுமார் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.2 – லட்சுமண குமார் - 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

இந்த வழக்கில் நீங்கள் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து உங்களுக்கு ஏதேனும் அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. உங்களை இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க யார் அழைத்தார்கள் என்றால், எங்கள் வழக்கறிஞர் அழைத்தார், வந்தேன். இந்த வழக்கானது என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியாது. இந்த வழக்கின் தரப்பினர்கள் குறித்த விபரங்கள் உங்களுக்குத் தெரியுமா என்றால், எத்தனை நபர்கள் வழக்கு போட்டிருக்கிறார்கள் என்ற விபரம் தெரியாது. வழக்கு சொத்தானது எந்த சர்வே எண்ணில் உள்ளது என்ற விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியாது. அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால், அது எனக்குத் தெரியாது. வாதிகள் உங்களுக்கு உறவினர்களா என்றால், இல்லை. வழக்கு சொத்தில் அரசங்கத்தால் என்ன கட்டிடம் கட்டப்பட்டது என்றால், மகளிர் சுயஉதவிக்குழுவிற்காக கட்டிடம் கட்டப்பட்டது. வாதிகளின் சொத்திற்கு தார்சாலை வழியாக செல்லலாம் என்றால், சரிதான். வழக்கு சொத்து எங்குள்ளது என்று எனக்குத் தெரியாது என்றாலும், வாதிகளுக்கு வேறுபாதை உள்ளதால் இந்த வழக்கு சொத்து வழியாக செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், வாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. வழக்கு சொத்தானது காலங்காலமாக அரசாங்கத்திடம் உள்ளது என்றாலும், அங்கு பல்வேறு அரசு அலுவலகங்கள் இருந்து வருகிறது என்றாலும், சரியல்ல.

ஒப்பம் / லட்சுமணகுமார்

ஒப்பம் / திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.